செ.வெ.எண்: 38 நாள்: 14.03.2017

**புதுக்கோட்டை மாவட்டத்தில் ரூ.2.79 கோடி மதிப்பீட்டில் தீவனகிடங்குகள் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது - மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை கால்நடை மருந்தகத்தில், கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் உலர் தீவனக்கிடங்கினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த புதிய உலர் தீவனகிடங்கினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தும், விற்பனையினை துவக்கி வைத்து பேசியதாவது:

தமிழகஅரசு கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. இதன்படி தமிழகஅரசு வறட்சியிலிருந்து கால்நடைகளை பாதுகாக்கும் வகையில் உலர்தீவன கிடங்குகள் அமைக்க உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் விராலிமலையில் வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ் ரூ.18.60 இலட்சம் மதிப்பீட்டில் உலர் தீவனக்கிடங்கு அமைக்கப்பட்டு விற்பனை துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கால்நடை வளர்ப்பவர்கள் மிகுந்த பயன்பெறுவார்கள். மேலும் உலர் தீவனம் பெறும் பயனாளிகள் கால்நடை வளர்ப்பவர்களாக இருப்பதுடன் தினசரி ஒரு பசு / எருமைக்கு 3 கிலோ வீதம், 1 வாரத்திற்கு 21 கிலோ தீவனம் வழங்கப்படும். தீவன வைக்கோல் 1 கிலோ ரூ.2க்கு மானிய விலையில் வழங்கப்படுவதுடன், ஒருவருக்கு அதிகபட்சமாக 5 கால்நடைகளுக்கு வழங்கப்படும்.

நமது மாவட்டத்தில் புதுக்கோட்டை கால்நடை பெரு மருத்துவமனை, கந்தர்வக்கோட்டை கால்நடை மருத்துவமனை, கோமாபுரம், கறம்பக்குடி, ஆலங்குடி, அன்னவாசல், விராலிமலை, ஆவூர், கீரனூர், காரையூர், அறந்தாங்கி, நாகுடி, மணமேல்குடி, கரூர் மற்றும் அரிமளம் கால்நடை மருந்தகங்கள் என மொத்தம் 15 இடங்களில் தீவனக்கிடங்குகள் அமைக்க தலா ரூ.18.60 இலட்சம் என மொத்தம் ரூ.2.79 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 10 இடங்களில் தீவனக்கிடங்கு திறக்கப்பட்டுள்ளதுடன் மீதமுள்ள தீவனக்கிடங்குகள் பணிகள் முடிக்கப்பட்டு விரைவில் திறக்கப்படவுள்ளது. மேலும் இலுப்பூர் வட்டத்தில் புதிய கால்நடை உதவி இயக்குநர் அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது. எனவே அனைத்து கால்நடை வளர்ப்பவர்களும் இதனை உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பா.ஆறுமுகம், இணை இயக்குநர் மரு.சதாசிவன் (கா.ப.து), உதவி இயக்குநர் மரு.தேவதாஸ், முன்னாள் ஒன்றியக்குழு துணைத்தலைவர் திரு.திருமூர்த்தி, முன்னாள் ஆத்மா குழுத்தலைவர் திரு.பழனியாண்டி, கூட்டுறவு சங்கத்தலைவர்கள், முன்னாள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**